புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# பத்துப்பாட்டு நூல்களில் தமிழர்களின் வணிகமரபு வெளிப்பாடுகள்

**கட்டுரையாளர்**
**பேரா. ஆ. அடைக்கலராஜ்**
*தமிழாய்வுத்துறை*
*தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,*
*திருச்சி – 620 002.*

**ஆய்வுச்சுருக்கம்**

*பழந்தமிழர்கள் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கேற்ப பொருளீட்டும் தன்மை கொண்டவர்களாக விளங்கினார்கள். குறிப்பாக அவர்கள் வாணிபத்தைப் போற்றி வந்தார்கள் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றன. ஒரு நாட்டின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது உழவுத் தொழிலும், இயற்கையும் செயற்கையுமான விளைபொருட்களாற் செய்யப்படும் பல்வேறு கைத்தொழில்களும், நிலவழியும் நீர்வழியும் நடத்தப்பெறும் வணிகங்களும் தான் என்பதை பண்டையத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். ஓரிடத்தில் உள்ள பண்டங்களை இன்னோரிடத்தில் கொண்டு சென்று விற்றுப் பொருள் ஈட்டுதல் வாணிகம் எனப்படும். தமிழகத்தில் சங்ககாலம் முதலாக இவ்வாணிகம், உள்நாட்டு வாணிகம், அயல்நாட்டு வாணிகம் என்ற இரண்டு நிலையில் நிகழ்ந்து கொண்டு வருகிறது. கி.மு.மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பாகவே தமிழர்கள் வடஇந்தியர்களோடு தொடர்பு கொண்டு வாணிகத்தில் சிறந்து விளங்கினார்கள், உள்நாட்டு வாணிபத்தைப் பெருக்க அங்காடிகளையும், வெளிநாட்டு வாணிபத்தைப் பெருக்க துறைமுகங்களையும் நிறுவி உயர்ந்த குறிக்கோள் மிக்க வாழ்க்கையைப் பழந்தமிழர்கள் வாழ்ந்தார்கள். சங்ககால மக்களின் வாழ்க்கைக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு. பத்துப்பாட்டு நூல்களில் வணிகம் சார்ந்த கூறுகளை விரிவாக ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**கலைச்சொற்கள்**

*மலை, நிலம், நீர், கடல், நாவாய்கள், துறைமுகம், சேரர், சோழர், பாண்டியர், ஏமாற்றாமை, பொய்கூறாமை.*

***முன்னுரை***

*செம்மைசால் இயல்புகளைத் தெற்றென உணர்த்தும் ஆற்றல் பெற்றவைகள் செவ்வியல் இலக்கியங்கள். தமிழர்களின் வணிக மரபு நிலைகளை உய்த்து உணர்ந்தறிவதற்குரிய காலப்பெட்டகமாக, இச்செவ்வியல் இலக்கியங்களாகிய சங்க கால இலக்கியங்கள் திகழ்கின்றன. அச்சங்க இலக்கிய நூல்களான,*

***"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை***
***பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய***
***கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்***
***பாலை கடாத்தொடும் பத்து"[1]***

*(பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும் தமிழரும்: ப:8)*

*என்னும் பத்துப்பாட்டிலும், எட்டுத்தொகையிலும் அகம், புறம் சார்ந்த நூல்களின் வாயிலாகச் சிறந்து விளங்கிய தமிழர்களின் வணிக மரபினையும், வணிகத்திற்காக அமைக்கப்பட்ட குழுவினையும், நீர் நிலம் வழியாக மேற்கொண்ட வணிகச் சிறப்பினையும், மூவேந்தர் நாடுகளில் அமைக்கப்பட்ட துறைமுகங்களையும், துறைமுகங்களில் ஏற்றுமதி, இறக்குமதியான, பொருட்களைப் பண்டமாற்று முறையில் பெற்று வணிகம் செய்து வந்த தமிழக வணிகர்களின் தன்மையினையும், நேர்மையினையையும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***தமிழர்களின் வணிக மரபு***

*நாகரிக மக்களின் வாழ்க்கைக்கு உணவு, உடை, உறைவிடம், ஊர்தி போன்ற பொருள்களும், பொன், வெள்ளி போன்ற செல்வங்களும் இன்றியமையாதவையாகும். ஒரு நாட்டின் நல்வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது உழவுத் தொழில் என்றும், அதற்குப் பின்னர் நிலத்தின் வழியாகவும், நீரின் (கடல்) வழியாகவும் நடத்தப்பெறும் 'வணிகம்' என்றும் சங்க காலத்தில் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதற்குச் சான்றாகத் தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர்களான, சேர, சோழ, பாண்டியர் இருவகை வணிகத்தையும் வளப்படுத்துவதற்காகப் பல்வேறு சாலைகளையும், துறைமுகங்களையும் அமைத்து அவற்றைப் பாதுகாத்தும் வந்தனர். நிலம் கடந்து செய்யும் வணிகம் காலிற்பிரிவு என்றும், நீர் கடந்து (கடல்) செய்யும் வணிகம் கலத்தின் பிரிவு என்றும் கூறப்பட்டுள்ளது. 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே நீர் (கடல்) வணிகம் சிறந்து விளங்கியதை அறியலாம்.*

***நில (சாலை) வணிகமும், நீர்(கடல்) வணிகமும்***

*தனிவழி என்றும் பெருவழி என்றும் கூறப்படுகின்ற சாலைகள் நாடெங்கும் இருந்தன. அவை 64 சாண் அகலமும், இருபுறமும் மரங்களும் கொண்டு அமைக்கப்பட்டன. ''கோட்டாற்றுச் சாலை, மதுரைப்பெருவழி, கொங்குவழி, தடுகைவழி, வடுகவழி'' முதலிய*

பெயர்களால் தமிழ்நாட்டுப் பெருநகர்கள் மட்டுமல்லாமல், தென்னாட்டுச் சீமைகளும் சாலைகளால் இணைக்கப்பட்டிருந்தன. இந்த வழிகளைப் பயன்படுத்திச் சங்ககாலத்தில் 'நில வணிகம்' நடைபெற்றது.

பஃறுளியாறு மூழ்குவதற்கு முன்னரே கிழக்கில் சாவகம், மலையா, காழகம் (பர்மா) சீனம் முதலிய நாடுகளுடனும், மேற்கில் அரேபியா, பாபிலோனியா ஆகிய தேசங்களிலும் பண்டைய தமிழகம் 'நீர் வணிகம்' (கடல் வணிகம்) செய்து வந்தது. சீனக்கண்ணாடி, சீனக்கிண்ணம், சீனப்பட்டுப்போன்ற பண்டங்கள் சீனத்திலிருந்தும், இலவங்கம், பட்டை, கிராம்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி ஆகிய சரக்குகள் நாக நாடுகள் என்னும் கிழக்கிந்திய தீவுக்கூட்டத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதை,

**"நீல நாகம் நல்கிய கலிங்கம்"[2]**

*(சிறுபாணாற்றுப்படை : 99, ஆய்வள்ளல்: ப:19)*

என்ற 'சிறுபாணாற்றுப்படை' இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழரசர்களின் நால்வகைப் படைகளுள் ஒன்றான குதிரைப் படைக்குத் தேவையான குதிரைகள் அரபியாவிலிருந்தும், சித்திரைப்பேழை, பாவைவிளக்கு, மது முதலிய பொருள்கள் யவன நாடுகளில் இருந்தும் தமிழகத்திற்குக் கடல் வழியாக மரக்கலங்களில் ஏற்றிவந்து இறக்குமதி செய்யப்பட்டன.

**வணிகத்திற்காக அமைக்கப்பட்ட துறைமுகங்கள்**

மூவேந்தர் காலத்தில் தமிழ்நாட்டுக் கடற்கரையில் வணிகம் செய்வதற்காகப்பல்வேறு துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

சேரன் நாடு - காந்தர், கொடுங்கோவூர், கோழிக்கோடு,
தொண்டி, முசிறி, வஞ்சி.

சோழன் நாடு - காரைக்கால், நாகை, புகார், மயிலை, மல்லை.

பாண்டியன் நாடு – கவாடம், காயல், கொற்கை.

முதலியவை துறைமுகங்களாக இருந்து வந்தன. இரவில் வழிதவறிச் செல்லும் கலங்களுக்கு வழிகாட்டுவதற்கு ஒவ்வொரு துறைமுகத்திலும் கலங்கரை விளக்கம் *(Light House)* இருந்ததை,

**"இலங்குநீர் வரைப்பின் கலங்கரை விளக்கமும்**
**விலங்குவலைப் பரதவர் மீன்திமில் விளக்கமும்"[3]**

*(சிலப்பதிகாரம்: கடலாடுகாதை: 141, 142 வரிகள் - ப: 88)*

**"இரவில் மாட்டிய இலங்கு சுடர் நெகிழி**
**உரவு நீர் அழுவத்து ஓடு கலம் கரையும்**
**துறை பிறக்கு ஒழியப் போகி"[4]**

*(பெரும்பாணாற்றுப்படை : 349-351 வரிகள் - ப:41)*

என்று சிலப்பதிகாரத்திலும், பெரும்பாணாற்றுப் படையிலும் 'கலங்கரை விளக்கம்' பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வணிகத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட நாவாய்கள்**

*வணிகத்திற்காகப் பல்வேறு நாடுகளிலிருந்து 'நாவாய்கள்' (கப்பல்கள்)வந்து சென்றன. இதனை,*

***“பாற்கேழ் வால் உளைப் புரவியோடு வடவளம் தரூஉம்***

***'நாவாய்' சூழ்ந்த நளி நீர்ப் படப்பை”[5]***

*(பெரும்பாணாற்றுப்படை: 320, 321 வரிகள், ப: 95)*

*என்பதனை, பால் போன்ற நிறமும் வெண்மையான தலையாட்டத்தினையுமுடைய குதிரைகளுடன், வடநாட்டிலிருந்து வரும் பொன், மணி முதலிய வளம் நிறைந்த பொருட்களைக் கொண்டு வரும் 'நாவாய்கள்' சூழ்ந்து நிற்கும் செறிவான வணிகர்கள் உறையும் பட்டினம் என்று 'கடியலூர் உருத்திரங்கண்ணனார்' விளக்குகிறார்.*

***“நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி***

***வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!”6***

*(புறநானூறு : பாடல் : 66, ப:103)*

*கரிகால்சோழனின் முன்னோர் வளிதொழில் (காற்றில் இயக்கம்) அறிந்து 'நாவாய்' செலுத்தியதை 'புறநானூறு' பதிவு செய்துள்ளது.*

**வணிகக் குழுவின் அமைப்புகள்**

*வணிகத்திற்கென வணிகக்குழுக்கள் இருந்தன. இவ்வணிகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் துறைமுகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். கி.பி.12-13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்களில் 'சித்திரமேழி' என்ற வணிகக்குழு முக்கிய இடம் பெறுகின்றது. மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டில் இக்குழுவினரைச் 'சித்திரமேழி பெரிய நாட்டார்' எனக் குறிப்பிடுகின்றனர். இவ்வணிகக்குழு தமிழகத்தில் பரவி விவசாய அமைப்பாக இருந்து வந்துள்ளது. இக்குழுவினர் இலங்கை மற்றும் தென்னிந்தியா பகுதிகளில் கடல் சார்ந்த வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்.*

**செவ்விலக்கியங்களில் பண்டமாற்று முறை**

*ஒரு பண்டத்தைக் கொடுத்து அதற்கு மாறாக மற்றொரு பண்டத்தைப் பெற்றுக் கொள்வது தான் பண்டையகால வணிகமுறை. இம்முறை தமிழ்நாட்டிலும் இருந்து வந்தது. இவ்வணிகத்திற்குப் 'பண்டமாற்று முறை' எனப்பெயரிட்டனர். இம்முறையைச் செவ்விலக்கியங்கள் அதிகமாகப் பகர்கின்றன.*

**பொருநராற்றுப்படை**

*பொருநராற்றுப்படையில் 'தேனையும், நெய்யையும், கிழங்கையும் கொடுத்தவர்கள் அவைகளுக்கு மாறாக மீன், மது முதலியவற்றைப் பெற்றுக் கொண்டு சென்றுள்ளனர் என்பதை,*

***“தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்***

***மீன் நெய்யோடு, நறவு மறுகவும்.”7***

*(பொருநராற்றுப்படை : 214, 215 வரிகள், ப:77)*

என்றும் இனிய கரும்பு, அவல் ஆகியவைகளுக்குப் பதிலாக மான் இறைச்சியையும், கள்ளையும் பெற்றுள்ளனர். இதனை,

**"தீம் கரும்போடு அவல்வகுத்தோர்**

**மான் குறையோடு மதுமறுகவும்"[8]**

*(பொருநராற்றுப்படை : 216, 217 வரிகள், ப: 77)*

என பொருநாராற்றுப்படையில் குறிக்கப்பட்டுள்ளது.

**பெரும்பாணாற்றுப்படை**

தொண்டைமானின் நகரச் சிறப்புப் பற்றி நவிலும் போது பண்டமாற்றுச் செய்தி பற்றிப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கப்பல்களில் வந்து துறைமுக நகரங்களில் இறக்குமதியான முத்து, பவளம், மாணிக்கம், சந்தனம் போன்றவை உள்நாட்டு வணிகர்களால் விற்கப்பட்டு, அதற்கிணையானப் பொருள்களைப் பெற்று மக்கள் சுற்றத்தாரோடு மகிழ்ந்திருந்தனர் என்பதனை,

**"மலையவும் கடலவும் மாண் பணம் தரூஉம்**

**அரும்; பொருள் அருத்தும்"[9]**

*(பெரும்பாணாற்றுப்படை : 67, 68 வரிகள் : ப:29)*

என்று பெரும்பாணாற்றுப்படையின் பாடல் வரிகள் எடுத்து இயம்புகின்றன.

**சிறுபாணாற்றுப்படை**

ஓய்மா நாட்டு நல்லியக்கோடலணின் நாட்டின் பெருமையைக் குறிப்பிடும்போது துறைமுகமான எயிற்பட்டினத்தில் ஒட்டகம் உறங்கிக் கிடப்பது போல, கடல் கொண்டு வந்து ஒதுக்கிய அகில் மரமும், மற்ற பொருட்களும் குவிந்துள்ளன. அவ்வகில் விறகாலே எரியூட்டி நுளை மகள் 'தேறலை அளிப்ப' என்னும் கருத்தை,

**"ஓங்குநிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன**

**வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின்**

**கரும் புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்**

**மதிஏக் கறூஉம் மாசறு திருமுகத்து,**

**நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த**

**பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்"[10]**

*(சிறுபாணாற்றுப்படை: 155 – 160 வரிகள், ப: 29)*

என்று சிறுபாணாற்றுப்படை வெளிப்படுத்தியுள்ளது. எயிற்பட்டினத் துறைமுகத்தில் வணிகம் நிகழ்ந்ததையும், பண்டமாற்று செய்யப்பட்டதையும் அறிய முடிந்தது.

**நெடுநல்வாடை**

நெடுநல்வாடையில், யவனவர்களால் செய்யப்பட்ட பாவை விளக்குகள் இருந்தன. இவை மண்ணாலும் இரும்பாலும் செய்யப்பட்டன. அவ்விளக்குகளை, தமிழ் மக்களும்

பயன்படுத்தி வந்தனர். இதனால் தமிழ் நாட்டிற்கும் கிரேக்க நாட்டிற்குமிடையே வணிகத் தொடர்பு இருந்ததை அறியலாம். இதனை,

**“யவனர் இயற்றிய, வினைமாண் பாவை,**
**கையேந்து ஐ அகல் நிறைய நெய் சொரிந்து**
**பரூஉத்திரி கொளீஇய, குரூஉத்தலை நிமிர் எரி”**[11]

(நெடுநல்வாடை: 101 – 103 வரிகள், ப: 146)

என்ற பாடல் அடிகளின் மூலம் யவனருக்கும், தமிழருக்குமிடையே இருந்த வணிக நட்பு நவிலப்பட்டுள்ளது.

**பட்டினப்பாலை**

தமிழக வணிகர்கள் அறநோக்கு உடையவர்களாகவும், நடுநிலை தவறாதவர்களாகவும், ஏமாற்றாமை, பொய் கூறாமை ஆகிய நற்பண்புகளைக் கொண்டவர்களாகவும் இருந்தனர். மேலும் தம்முடைய வணிகப் பொருட்களையும், பிறருடைய வணிகப் பொருட்களையும் வேறுபடுத்தி நோக்காது ஒன்றுபோலக் கருதினர். 'பண்ட மாற்று முறையிலும்' தம் கொடுக்கும் பொருட்களுக்கு அதிகமாகப் பிறரிடம் பெறுவதுமில்லை. வாங்கும் பொருட்களுக்குக் குறைவாகக் கொடுப்பதுமில்லை. அவர்களிடம் நியாயமான வணிகமுறையே காணப்பட்டது. தங்களுக்குக் கிடைக்கக் கூடிய இலாபத்தை வெளிப்படையாகக் கூறி வணிகம் செய்தனர். இதனை,

**“நெடுநுகத்துப் பகல் போல**
**நடுவுநின்ற நல்நெஞ்சினோர்**
**வடுஅஞ்சி வாய் மொழிந்து,**
**தமவும் பிறவும் ஒப்ப நாடிக்,**
**கொள்வதூ உம் மிகை கொளாது,**
**கொடுப்பதூஉம் குறை கொடாது**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்”**[12]

(பட்டினப்பாலை: 206 – 211 வரிகள், ப: 174)

என்று பட்டினப்பாலை, தமிழக வணிகர்களின் நற்பண்பைப் பகர்கின்றது.

**மதுரைக்காஞ்சி**

மதுரைக் காஞ்சியிலும் 'பண்டமாற்று முறை' இருந்துள்ளது. வணிகர்களின் இல்லத்தில் குன்றுகளைப் போன்று, பல வகையான பண்டங்கள் குவிந்து கிடக்கும். உணவு பண்டங்கள் நிறைந்திருக்கும். மலைகளிலிருந்தும் நிலத்திலிருந்தும், நீரிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் பல வகையான இரத்தினங்களையும், முத்துக்களையும், பொன்னையும் பெற்றுக் கொள்வார்கள். அவற்றிற்கு ஈடாகப் பல நாடுகளிலிருந்தும் கொண்டு வந்து குவிந்திருக்கின்ற சிறந்த பல பண்டங்களைக் கொடுப்பார்கள். இதனை,

**“அறவழி பிழையாது ஆற்றின் ஒழுகிக்,**
**குறும்பல் குழுவின் குன்று கண்டன்ன**

**பருந்திருந்து உவக்கும் பன்மாண் இல்லில்,**

**பல்வேறு பண்டமோடு ஊன்மலிந்து கவினி,**

**மலையவும், நிலத்தவும் நீரவும் பிறவும்**

**பல்வேறு திருமணிமுத்தமொடு பொன் கொண்டு**

**சிறந்த தேளத்துப் பண்ணியம் பகர்க்கும்”[13]**

*(மதுரைக்காஞ்சி : 500 – 506 வரிகள், ப:123)*

என்றும் நவிலும் இவ்வடிகள் வணிகர்களின் மாண்பினையும், நேர்மையையும், செல்வச் செழிப்பையும் எடுத்தியம்பியுள்ளது.

**தொகுப்புரை**

இவ்வாறாக பத்துப்பாட்டு இலக்கியங்களின் வாயிலாகத் தமிழர்கள் மேற்கொண்ட வணிக மரபினையும், தன்மையினையையும், நீர், நிலம் (கடல், சாலை) வழியாகக் கையாண்ட வணிகச் சிறப்பினையும், சேர, சோழ பாண்டிய நாடுகளில் வணிகத்திற்காக அமைக்கப்பட்ட துறைமுகங்களையும், துறைமுகங்களைக் கொண்ட கடல் வழியாக வணிகத்திற்காக இயக்கப்பட்ட 'நாவாய்'களையும், அவைகளுக்கு வழிகாட்டியாய் விளங்கிய அமைப்பினையும், மலை, நீர், நிலம், பிற இடங்களிலிருந்து வந்து குவிந்துள்ள பொருள்களையும், துறைமுகங்களில் ஏற்றுமதி, இறக்குமதியான பொருட்களையும், 'பண்டமாற்று முறையில்' வணிகம் செய்து வந்த தமிழர்களின் பெருமையினையையும், நற்பண்புகளையும், இக்கட்டுரை வழியாக அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சாமி சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், முதற்பதிப்பு : 2003, ப: 8
2. புலவர் தமிழ்முடி, சிறுபாணாற்றுப்படை, முதற்பதிப்பு : 2010, ப: 19.
3. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், மறுபதிப்பு: 2009, ப : 88.
4. பேராசிரியர் சா. நசீமா பானு, பெரும்பாணாற்றுப் படை, முதற்பதிப்பு : 2010, ப:41.
5. மேலது ப : 95
6. புலியூர்க்கேசிகன், புறநானூறு, மூன்றாம் பதிப்பு: 2014, ப: 103.
7. முனைவர் நா. இளங்கோ, பொருநராற்றுப்படை, முதற்பதிப்பு : 2010, ப: 77.
8. மேலது ப : 77.
9. பேராசிரியர் சா.நசீமா பானு, பெரும்பாணாற்றுப் படை, முதற்பதிப்பு : 2010, ப:29.
10. புலவர் தமிழ்முடி, சிறுபாணாற்றுப் படை, முதற்பதிப்பு: 2010, ப:29.
11. சாமி சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், முதற்பதிப்பு : 2003, ப:146.
12. மேலது ப: 174.
13. மேலது ப: 123.

**துணைநூல் பட்டியல்**

1. சிலப்பதிகாரம், புலியூர்க் கேசிகன் (தெளிவுரை), பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108. மறுபதிப்பு : 2009.

2. புறநானூறு, புலியூர்க்கேசிகன் (தெளிவுரை), கங்கை புத்தக நிலையம், 13, தீன தயாளு தெரு, தி.நகர், சென்னை – 600 017. மூன்றாம் பதிப்பு : 2014.
3. பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், சாமி, சிதம்பரனார், அறிவுப் பதிப்பகம், 241, ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை – 14. முதற்பதிப்பு : அக்டோபர் – 2003.
4. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு சிறுபாணாற்றுப்படை, புலவர் தமிழ்முடி (தெளிவுரை), கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017. முதற்பதிப்பு : ஜுன் - 2010.
5. பெரும்பாணாற்றுப்படை, பேராசிரியர், சா.நசீமா பானு, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600017. முதற்பதிப்பு : ஜுன் - 2010.
6. பொருநராற்றுப் படை, முனைவர் நா. இளங்கோ, (தெளிவுரை) கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017. முதற்பதிப்பு: ஜுன் - 2010.